ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் அடிக்கடி யுத்தம் நேர்ந்ததென்றும், அதில் சிலகாலம் அசுரர்கள் வெற்றிப் பெறுவதும் அப்படிசிலகாலம் கழிந்தபின் பரமேசுவரனது அனுக்கிரஹத்தால் அஸுரர்களை ஸம்ஹரித்து தேவர்கள் ஜெயம்பெற்று ஸுகப்பட்டார்களென்றும் சுருதிஸ்மிருதி புராணாதிகளில் பிரஸித்தமாயுள்ளது. இந்த தேவாஸுரயுத்தம் லோகாந்தரத்தில் நடப்பதுபோல் மனுஷ்யலோகத்திலும் ஒவ்வொரு மனுஷ்யனிடமும் தினந்தோறும் நடந்துவருவதாக சுருதி அபிப்பிராயப்படுகிறது. அதில் ஸாத்துவிகமனோவிருத்திகள் தேவர்கள் என்றும், ராஜஸதாமஸமனோவிருத்திகள் அஸுரர்களென்றும் ரஜோகுண தமோகுணம் மிகுந்த மனிதர்களது ஸஹவாஸத்தாலும், ராஜஸதாமஸக்கிரியை கல்வி முதலியவைகளாலும், அத்தகைய ஆஹாரங்களாலும் மனது அசுத்தியடையுங்காலத்தில் உற்பவிக்கின்ற மனோவிருத்திகள் ரஜோகுண தமோகுணமேறியதாகின்றபடியால் அச்சமயம் அவ்விருத்திகள் ஸாத்துவிக விருத்தியை அமுக்கிவிடுவதுபற்றி வெற்றிபெற்றனவென்றும் பூர்வபுண்ய வசத்தால் ஸாத்விகர்களான ஸாதுக்களுடைய ஸஹவாஸத்தாலும், ஸத்கிரியைகளாலும், ஸத்வித்தையினாலும், ஸாத்துவிக ஆஹாரங்களாலும் அசுத்தி நீங்கி மனது சுத்தியடைந்த காலத்தில் உதிக்கின்ற மனோவிருத்திகள் ஸத்துவகுணமிகுந்ததாகி ராஜஸதாமஸவிருத்திகளை நசிப்பிக்கும்போது அந்த ஸாத்துவிகமனோவிருத்தி ஜயித்ததென்றும், அதுவே ஸுக ஹேதுவென்றும், மற்றது துக்கஹேதுவென்றும் கூறப்படுகின்றது. ஆஸுரமனோவிருத்தியுடையவர்கள் ஸாத்துவிகர் செய்வதெல்லாம் தப்பு என்றும் தாங்கள் செய்வதே உலகநன்மைக்குரியதென்றும் தங்களினத்தோடு சேருகின்றவர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு காரியத்தை முடித்துவிட்டால் வெற்றி பெற்றோமென்றும் மற்றவர் தோல்வியடைந்துவிட்டாரென்றும் ஸ்வகோஷ்டியில் ஸந்தோஷப்படுவதோடு பஹிரங்கமாயும் பிரசுரிப்பார்கள். இதுபோலவேதான் தற்காலத்தில் சிலர் வைதிகர்களை வஞ்சகரென்று தூஷித்து தங்களை நன்மைபுரிபவர்களாகப் புகழ்ந்துகொண்டு ஸந்தோஷப்படுகிறார்கள். அஸுரர்கள் ஸந்தோஷப்பட்டதைக்கேட்டு ஸாதுக்களான மஹரிஷிகள் அந்நியாயமாய் இவர்கள் கெட்டுப்போகப் பார்க்கிறார்களேயென்று வருத்தப்பட்டதுபோல் தற்போதும் சிலர் வேதவிருத்தமான கார்யத்திலீடுபட்டு ஸாதித்துவிட்டோமென்று களிப்படைவதைக்கேட்டு வருத்தப்படுவார்கள். அப்படி அவர்களது மனவருத்தத்திற்கு ஆளாகாமல் நல்லதைக்கேட்டு நன்மையை யடைவார்களாக.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

சுக்ல-ஹு புரட்டாசி-மீ ௧௮௨

## விவாஹவயது மசோதா சட்டமாகிவிட்டது.

இனிமேல் வைதிகர்கள் என்ன செய்யப்போகிறார்களென்று சிலர் ஹேளனமாகச் சொல்லிக்கொண்டபோதிலும் வாஸ்தவத்தில் வைதிகர்கள் செய்யவேண்டியதை நிதானித்துக்கொள்ள வேண்டியது அவசியமான காரியமாகும். வேறு அவர்கள் செய்யக் கூடியது என்ன இருக்கிறது. துரோணர் அசுவத்தாமா முதலியவர்கள்போல் அஸ்திர பலத்தைக்கொண்டு காரியத்தை ஸாதித்துக்கொள்ளப் போகிறார்களா ? அல்லது வஸிஷ்டாதிகளைப் போல் தபோவலிமையால் ஏற்பட்ட சாபபலத்தைக்கொண்டு தர்மத்தை நிலை நாட்டப்போகிறார்களா ? ஒன்றுமில்லை. ஆனால் வைதிகர்களுக்கு சத்துருவினிடத்திலிருந்தும் குணத்தையே கிரஹிப்பது என்றதோர் பழைய வழக்கமுண்டு. அதைக் கைப்பிடித்து தற்காலத்தில் சிலர் காரியத்தை ஸாதித்துக்கொள்ள ராஜாங்கத்தோடு ஒத்துழைக்கக் கூடாதென்றும், ஸாத்துவிக சட்ட மறுப்புக்காகத் துணிய வேண்டுமென்றும் போதிப்பதையே இவர்களும் மதாசார ரக்ஷண விஷயத்தில் பெரியதோர் ஸாதனமாக அங்கீகரிப்பார்கள். ராஜீய விஷயத்தில் தலையிட்ட காங்கிரஸ் மஹாஸபை மதாசார விஷயத்தில் தலையிடக் கூடாதென்று வைதிகர் தடுத்திருப்பதைக் கவனிக்காமல் இந்த மசோதா விஷயத்தில் ஒரே பிடிவாதமாக இருந்து காரியத்தை ஸாதித்துவிட வேலை செய்ததுபோல், வைதிகர்களும் அத்தகைய காங்கிரஸ் மஹாஸபையோடு ஒத்துழைக்கக் கூடாதென்று நிச்சயிப்பார்கள். வைதிக மதாசார விஷயத்தில் ராஜாங்கத்தார் பக்ஷபாதம் பாராட்டாமல் நடு நிலைமை வஹிப்பதாகக் கூறின வாக்குறுதியை மீறி நடந்திருப்பதை நினைத்து "யதா ராஜா ததா பிரஜா:" என்ற நியாயப்படி மீறி நடக்கவேண்டுமென்றே துணிவார்கள். தண்டகாவனத்தில் ஜனஸ்தான வாஸிகளான ரிஷிகளைத் தின்றுவிட்டு மலைபோல்

குவித்திருந்த எலும்புக் குவியலைப் பார்த்தும் சாந்தமாயிருப்பதே ஸ்வதர்மமென்று தர்மத்தை நிலைநாட்டின மஹரிஷிகளது வம்சத்திலுதித்த வைதிகரும் சாந்தமாயிருந்தே ஸ்வதர்மத்தை இரக்ஷித்துக்கொள்வார்கள். ஜனஸ்தான வாஸிகளுக்கு சக்கிரவர்த்தித் திருமகனாய் அவதரித்த கருணைக் கடலான பகவான் அருள் புரிந்து தர்மத்தை நிலை நாட்டி தார்மிகர்களைப் பாதுகாத்தது போல்இன்றும்வருவாரென்றேஎதிர்பார்த்திருப்பார்கள். பகவானுக்குப் பத்து அவதாரத்திற்குமேல் கிடையாதென்று "**बहूनि मे व्यतीतानि जन्मानि**" என்ற கண்ணபிரான் திருவாக்கை நம்பிய வைதிகர்கள் நினைத்துவிடமாட்டார்கள். "**नचैव नभविष्यामस्सर्वे-वयमतः परम्**" என்ற வாக்கியப்படி பகவான் ஆவிர்ப்பாரென்றே உறுதி கொண்டிருப்பார்கள். கலியுக முடிவில் கல்க்கியாக தான் அவதரிப்பதற்கு ஒரு பிராமண கிராமத்தை மிஞ்சும்படி செய்வாரென்ற பவிஷ்யத் புராணக் கதைகளைப் பார்த்து, பிராம்மணனையும், பிராமண தர்மத்தையும் அடியோடழிக்கஎன்றைக்கும் எவராலும் முடியாதென்ற ஸத்தியாக்ரஹ விரதத்தோடே இருப்பார்கள். வேறு என்ன செய்யப்போகிறார்கள். எவ்வளவுபேர் பரிஹஸித்தாலும்,பலாத்காரம்செய்தாலும் யதீந்த்ரநாத்தாஸ்போலவே மதத்திற்காகமஹாத்யாகம்செய்யப் பலபேர் துணிந்திருப்பார்களென்று யாவரும் நம்பி ஸ்வதர்மத்தைக் கைவிடாமல்காப்பாற்றுவார்களாக.

சுபம்! பத்திராதிபர்.

---

# மதமும் ராஜீயமும்.

## விவாஹ வயது மசோதாவும் இராஜீய வாதிகளும்.

### அரசாங்கத்தாரின் கடமை.

இத்தலைப்பெயருடன் எழுதப்பெறும் நிரூபம் பல உட்பிரிவுகளுடன் மிகவும் விரிவாயிருப்பினும் பிரகிருதம் வேண்டிய அளவு சுருக்கமாக வரைய முற்படுகின்றனம்.

முகவுரை:— பொதுவாக ஓர் தேசத்தின் முன்னேற்றம், மதம், ராஜகீயம் இரண்டு விஷயங்களைப் பொருத்திருப்பதாகக்

கூறலாம். 1. ஓர் சாரார் ராஜீயசுயேச்சையின்றி மதவிஷயங்களிலோ, ஸமூஹகாரியங்களிலோ தடையற்ற முன்னேற்றம் ஸாத்யமில்லையாதலால் ராஜீயசுயேச்சையே முதன்மையானது எனக் கூறுவர். எனவே ராஜீயசுயேச்சையடைந்தபின்னர் மதத்தைக் கவனித்துக்கொள்ளலாம் என்பர். 2. பிறிதோர்சாரார் தேசிய சுதந்திரம் எவ்வளவு அவசியமோ அதற்குச்சிறிதும் குறைவுபாடின்றி மதமுன்னேற்றமும் (அதாவது மதக்கொள்கைகளில்பற்றும் அநுஷ்டானமும் அநுபவமும்) அவசியமென உரைப்பர். இவர்களது கொள்கை யாதெனில் ராஜீயசுதந்திரமிருப்பினும் மதப் பயிற்சி மறைவுபடின் நிலையான ஸமாதானத்தை ஸ்தாபித்தல் முடியாதெனவும் அவ்வண்ணமே மதம் தீவிரமாக நமது தினசரி வாழ்க்கையில் பிரிக்கக்கூடாதவாறு புகுத்தப்பட்டு இணைக்கப் பட்டிருப்பினும் அதைச் சரிவரக் காப்பாற்றிவருவதும் அதனால் பயன் பெறுவதும் ராஜீயவிடுதலையை அண்டியிருப்பதாகக் கூறுவர். 3. கடைசி பிரிவினரோவெனில் மதமே பிரதானமெனவும் மதத்திற்கு முரண்படும் யாவும் விலக்கத்தக்கன எனவும் ஆகவே மதமுரண்பாடின்றி ராஜீயசமூக காரியங்களில் ஈடுபடலாம் எனவும் சொல்வர்.

இதையே வேறுவிதமாக உரைப்பவர்களுமுளர். அவை முறையே மூன்றுவகைப்படும். 1. மதம் வேறு, ராஜகீயம் வேறு ஆகையால் ஒன்றன் சம்பந்தப்பட்ட காரியங்களை மற்றொன்றில் புகுத்தல் அடாத காரியம் என்பர். 2. மதமும் ராஜகீயமும் பிரிக்கக்கூடாத சம்பந்தத்தையுடையனவாதலின் இரண்டையும் ஒரேசமயத்தில் குறைவுபடாது காத்துவரவேண்டுமென்று உரைப்பர். 3. மதம் ராஜகீயம் இரண்டும் வெவ்வேறல்ல. மதமே ராஜகீயம், ராஜகீயமே மதம், இதனால் ஒருவர் மதத்திற்கோ தேசத்திற்கோ உள்ளன்புடன் தியாகம் செய்வாராகில் அதனால் தனக்கும் சுற்றத்தாருக்கும் இகத்திலும் பரத்திலும் முறையே நீடித்த நன்மையையும் அழிவற்ற சுகத்தையும் தேடிக்கொள்ளலாம் என மொழிவர்.

விவாக வயது மசோதா:— ராஜீயசுயேச்சையின் அவசியத்தை நாம் குறைவாகக் கருதவில்லையாதலால் ராஜீயம் மதம் இரண்டிற்கும் உயர்ஸ்தானத்தை அளிக்கின்றோம். ஆயினும் மதத்திற்கு

முரண்படும் காரியங்களில் ராஜீய அபிப்பிராயங்களும் விலக்கப்படுவற்குறித்தனவாகும்.

தற்சமயம் சட்ட சபையில் மதசம்பந்தமாக நிறைவேற்றப்பட்டுள்ள விவாக வயது மசோதாவை ஒட்டி, சீர்திருத்தக்காரர்களுக்கும், ராஜீயவாதிகளில் பெரும்பாலோருக்கும் அரசாங்கத்தாருக்கும் பலமான எச்சரிக்கை செய்கிறோம்.

1. சீர்திருத்தக்காரர்கள் அவர்கள் விரும்புவதை பலாத்காரமற்ற பிரசாரமூலமாக சாதித்துக்கொண்டிருந்தால் கண்ணியமாகவும் ஒழுங்காகவும் மனிதத்தன்மைக்கேற்றதாகவுமிருக்கும். தற்சமயம் அவர்களது தொகை நூற்றுக்கு 10க்கு மேலில்லை. மேல்நாட்டு நாகரீகவாடையடித்துள்ள இந்தியாவின்பெரியநகரங்களில்தான் அவர்கள்கூற்று சிறிது தாண்டவமாடி வருகிறது.

2. தேசிய சுயேச்சையை முன்னிட்டு பாடுபடும் பெரிய தியாகிகளாகிய மஹாத்மாகாந்தி, மோதிலால் நேரு முதலியோர் ஏன் மதவிஷயங்களில் மதக்கட்டளைகளுக்கு விரோதமாகப் பிரவேசிக்கவேண்டும்? ராஜீயப்போர் இவ்வுலக சம்மந்தமான சுதந்திரத்தைப் பற்றியதாகும். மதமோ முன் ஜன்மங்கள், வரும் ஜன்மங்கள், இடை ஜன்மம் இவைகள் ஸம்மந்தப்பட்டதாம். தற்சமயம் சங்கரர், ராமானுஜர், மத்வர் இவர்களது பீடங்களில் இருந்துவரும் மதாசாரியர்கள் மற்றும் (ராஜீய விஷயங்களில் தலைவர்களாக இருப்பவர் போன்று) மதவிஷயங்களில் பாண்டித்யம் பெற்ற பண்டிதர்கள் இவர்களை விட பொதுவாக ராஜீய வாதிகள் மதவிஷயங்களில் அதிக அறிவுபடைத்தவர்களா? இவர்கள் சமூக, பொருளாதார, ராஜீய சம்மந்தமாக சட்டசபைக்கு அனுப்பட்டவர்களே அல்லாது மதசம்பந்தமான விஷயங்களில் நமது பிரதிநிதிகள் அல்ல. மதாசாரியர்கள் உலகம் அறியாதவர்களென கூறுவார்களானால் மத நூல்களில் போதிய அளவு பயிர்ச்சியும் மதாசாரியர்களிடம், நெருங்கிய பழக்கமுமில்லாததே காரணமாகும். நிற்க, இதுகாறும் தேசிய சுயேச்சைக்கு விரோதமாக தென்னாட்டில் பிராமணர் பிரமணரல்லாதார் இயக்கம், வடநாட்டில் ஹிந்து முஸ்லீம் கலகங்கள், மற்றும் பல சமூக வேற்றுமைகள் இவைகளை மறைமுகமாகக் கிளப்பிவிட்டு இடையில் நடத்தப்பட்டு வருவதாகப் பல மேதாவிகளால் கூறப்படும் ஓர் முறையை இன்னும் நீடித்து நடத்துவதற்கு அறிகுறியாக "ராஜீயவாதிகள்-

மதஸம்ப்ரதாயகர்கள்" இவர்களுள் ஓர் புதிய கிளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தற்கால ராஜீயவாதிகள் ஏன் உடந்தையாயிருக்கிறார்கள்? ராஜீய விஷயங்களில் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கும் பெரியார்களைப்போலவே இன்னும் தாராள நோக்கத்துடன் மதத்திற்காக தியாகம் செய்பவர்களும் அதிகம் இருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். ராஜீயவாதிகள் மசோதாவை ஆதரித்தது தங்கள் அதிகாரத்தை மீறிய வரம்புகடந்த செய்கையாகும்.

3. அரசாங்கத்தார் தங்கள் பிரதிக்ஞைக்கு விரோதமாக நடந்திருப்பது சரியல்ல. சட்டசபை மதகாரியங்களில் பிரதிநிதி ஆகமாட்டாது. மெஜாரிட்டி சபை மெம்பர்களின் சொந்த அபிப்பிராயத்தை ஜனங்கள் மேல் பலாத்காரமாகத் தாக்கக்கூடாது. மேலும் சட்டசபையில் பல மதத்தைச் சார்ந்தவர்களால் நடத்திவைக்கப்படும் மசோதா கிரமமாக செல்லுபடியற்றது. கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் எவரும் தலையிடுவதை கண்டிக்க வேண்டியிருக்க, நடுநிலைமையும் வஹியாது ஆதாவு கொடுத்திருப்பது முற்றிலும் முரண்பட்ட செய்கையாகும். சட்டத்தினுதவியால் நபருக்கு இயற்கையாயமைந்துள்ள உணர்ச்சியை, மதத்தால் விதிக்கப்பட்டுள்ள ஓர் கடமையை பலாத்காரமாக அடக்கிவிடமுடியாது. இச்சட்டத்தால் சிறிது வெற்றி ஏற்படுவதாகத் தோற்றினாலும் பல கஷ்டங்களும் தொல்லைகளும் பிறகு ஏற்படும் என்பதெ முன்னமேயே தெரியப்படுத்துகிறோம். ராஜீயவாதிகளுடைய எதிர்ப்புடன் இருந்த அரசாங்கம் மத எதிர்ப்பையும் கொண்டு விட்டது. மதலக்ஷியத்தை நோக்கமாகக்கொண்டு, சட்டத்தை மீறவும், சிறை செல்லவும், ஸாத்விக முறையில் தங்கள் கடமைகளை நிறைவேற்றி வைக்கவும் அநேகர் தயாராயிருக்கிறார்கள். இவைகள் ராஜீயவாதிகள், அரசாங்கத்தார் இவர்களால் நன்கு உணரப்பட்டு உசிதமான வழி கடைபிடிக்கப்படுமாக.

R. நடராஜன்.

---

குறிப்பு:— சென்னை மாஹாணத்திலும், வட இந்தியாவிலும் ஆங்காங்கு ஜில்லாதோறும் தங்கள் மதக்கட்டளைக்காக அவசியம் ஏற்பட்டால் ஸாத்விக முறையில் சட்டத்தை மீறி நடக்க ஏற்பாடு செய்வதன் பொருட்டு பிரசாரகர்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாக திருச்சியிலிருந்து ஆர். நடராஜன் அறிவிக்கிறார்.

# விவாகமசோதாவும் நமதுகடமையும்.

(௫௨௬-வது பக்கத்தொடர்ச்சி.)

இம்மசோதா சட்டமாக்கப்பட்டால் நமது குறை ஒன்றை முதலில் போக்கிக்கொள்ள முயற்சிசெய்யவேண்டும். நமக்கு இதுகாறும் ஏற்பட்ட பெரும் குறை இது. இக்காலத்தில் ஒரு சமூகம் நியாயமாய் முன்னேற நினைத்தால் அவர்கள் முதலில் தனது சமூஹதாரரின் பெயரையும் அவர்களது நோக்கத்தையும், அடிக்கடி அரசாங்கத்தார் நினைக்கும்படி செய்துகொள்ளவேண்டும். அதற்கு முதற்படி நமக்கென்று ஆங்கிலத்திலும் தேசபாஷையிலும் ஓர் தினசரி பத்திரிகை வேண்டும். இப்பத்திரிகை ஆரம்பத்திற்கே நாம் முதலிற் பாடுபடவேண்டும். இதற்கு சுமார் 1-வருஷத்திற்கு முன்னமேயே நம் பரமாசாரியாள் பத்திரிகை ஒன்று இவ்விதம் வேண்டுமென்று உத்தேசித்ததைப்பற்றி முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். இதனால் நமக்கு உண்டாகும் முதல் பிரயோஜனம் யாதெனில் அரசாங்கத்திற்கு நாம் ஒருவர் இருக்கிறோம் என்பதைப் பகிரங்கப்படுத்திக் கொள்வதே. மற்றும் வேதசாஸ்திர விரோதம் செய்துகொண்டு இந்து மதத்தைக் காப்பாற்றுகிறதென்று கிளம்பியிருப்பவர்களுக்கு வேத விரோதமாய் ஒரு மதமும் கிடையாதென்றும் நன்கு புத்தி புகட்டவேண்டும்.

இன்னும் பத்திரிகையினால் ஏற்படும் பயன் இக்காலத்தில் சொல்லி முடியாது. பிறகு காங்கிரஸ்ஸுக்கு எதிராய் நாம் பிரசாரம் செய்யத் தலையிடவேண்டும். மோடிலால்நேரு, காந்தி முதலிய காங்கிரஸ்காரர்கள் கூடித்தான் இப்போது நம்மை அலக்ஷ்யம் செய்து சட்டத்தை பாஸ் செய்ய முயற்சிகொண்டார்கள். சட்டசபை எலக்ஷன் ஆரம்பிக்கும்போது ஓட்டுக்காக கிராமம் கிராமமாய் போய் காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டுக்கொடுக்காதீர்களென்றும் அவர்கள் நம் வர்ணாச்ரம தர்மத்தை அழிக்கத்தலைப்பட்டவர்களென்றும், இவர்கள் சேர்ந்து நமது தர்மத்தை அழித்துக் கொண்டு கேட்கும்.ஸ்வராஜ்யத்திற்கு நாங்கள் சம்பந்தமடையவே இல்லையென்றும் நாம் பிரசாரம் செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் கவர்ன்மெண்டார் நம் பக்ஷத்தில் தாராளமாய் இறங்குவார்கள். அதன் மூலம் நாம் செய்துகொள்ளக் கூடிய காரியம் அனேகம் உண்டு. ஆங்காங்கு பண்டிதர்களை ஸமாஸமாய் வர்ண

ச்ரம தர்மத்தைப் பற்றி உபன்யாஸம் செய்யுமாறு ஏற்படுத்தல் வேண்டும். இனி வரும் வித்தியார்த்திகளுக்கும் மதவிஷயமாய் உபன்யாஸம் செய்யும்படியான் ஏற்பாட்டையே கற்பித்தல்வேண்டும். சாஸ்திரங்களை ஏராளமாய் கற்று வாக்கியார்த்தம் செய்யும் ஆனந்தமே போதுமென்று இருப்பதைக்கொஞ்சகாலம் நிறுத்திக் கொள்ளவேண்டும். இன்னும் அப்போதப்போது தோன்றும் விஷயங்களை அப்போதப்போதே வெளிப்படுத்துவோம். சுபம் !

---

# சாரதா மசோதா.

இத்தலையங்கமிட்டுச் செப்டம்பர்-மீ 21உ சனிக்கிழமை மித்திரனில் கோவை, ஸ்ரீமான் எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் என்பார் சீர்திருத்தக்காரருக்கு வேண்டுகோள் என்று எழுதுவதில் வைதிககோஷ்டியினரான நம்மை மிகவும் பரிகசிக்கிறார். அதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். இவர்களைப்பற்றி சென்றவாரம் நமது பத்திராதிபரோ ஸ்ரீமான் கோபாலஸ்வாமி அய்யங்காரவர்களுக்குத் தீட்டியபதிலில் பெயரைமட்டிலும் குறித்துக் கடைசியில் எழுதிமுடித்துவிட்டு இவ்வாரம்எனக்கு விட்டுவைத்திருக்கிறார்கள் இனி ஐயங்காரவர்கள் கூறுவது இது. சாரதா மசோதா கவர்ண்மெண்டின் பூரணஆதரவைப் பெற்றிருப்பது பெண்ணுலகின் பெரும்பேறே என்று இங்கு நாம் கேட்கிறோம். பெண்ணுலகென்பது யாது? எங்கிருக்கிறது? இவர்கள் இப்பெரும்பேறடையாமலிருக்கும்போது இவர்கள் அடைந்த துன்பம் எத்தகைத்தது? தங்களைச்சார்ந்த பெண்டீர்களும் அக்கஷ்டத்தை அடைந்தனரா? அவர்கள் எவ்வளவுகாலம் அவ்விதம் அனுபவித்தனர்? அவர்கள் கஷ்டத்தை அனுபவித்ததை அவர்கள் குலத்திலுள்ள பெண்டீர் யாவரும் வாய்விட்டுக் கூறுவார்களா? அவர்கள் கூறாமல்போனால் ஐயங்காரவர்கள்போல் மேற்றிசை நாகரீகம் வாய்ந்த புருஷர்கள் கோஷ்டியில் அச்சம் நாணமின்றிக் கைகுலுக்கி நாற்காலியில் அன்னிய புருஷர்களுடன் உல்லாஸமாய் மூக்கண்ணாடி அணிந்து உட்காரும் ஆங்கில நாகரீகம் படைத்த ஆடவர்களென்று பெயர் படைத்தவர்களை நாம் கேட்கவரவில்லை. ஆகவே இது நம் ஆர்ய

குலத்தில் பிறந்த பெண் உலகிற்குப் பெருந்தீயே என்பதை ஐயங்காரவர்கள் கவனிக்கவேண்டும். இரண்டாவது— வைதிகக் கோஷ்டியினர் பெருந் தோல்வியடைந்தாராயினும் கடைசிவரையில் ஆரண்யரோதனம்செய்தே முடிப்பார்கள் என்கிறார்.

இவர்கள் சொல்வது உண்மையே. இங்கு நாம் முயற்சிசெய்தும் பயன்படாமற் போய்விட்டது. இதில் துக்கம்தான். ஆனால் ஆரண்யரோதனம் என்பதுமட்டிலும் தீரயோசிக்காமற் கூறுகின்றார்கள். எங்கள் ரோதனம் இன்னும் முடிவுபெறவில்லை. எங்களது அழுகுரல் உங்களது காதில் நாராசம்போற் பாயுமென்றும் கவர்ண்மெண்டுக்கு சுடும்படி ஆகுமென்றே எங்கள் குரலை இன்னும் உயர்த்தப்போகிறோம். இதிருக்கட்டும். எங்களை வைதிக கோஷ்டியினர் என்று பரிஹசிக்கின்றனர். இதனால் அய்யங்காரவர்கள் அவைதிக கோஷ்டியினர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளுகிறார். இப்பெயரை இவர் ஸ்தாபித்துக்கொள்ள நன்கு முயலும்போது தானும் சுயமரியாதை சங்கத்தில் சேர்ந்து ஐயங்கார் ராமசுவாமி என்ற பெயரையும் தள்ளிவிடுவார்கள் போலும்.

மூன்றாவது பழையன கழிதலும் புதியன புகுதலும் கால இயல்பென்பதைச் சிறிதேனும் கவனியாது மதத்தின் பெயரால் நம்மைப்பலர் நகைப்புக்காளாக்கிவைப்பதேவைதிகர்களின்பெருந் தொண்டாய் இருக்கிறது— என்று.

இப்பழையன கழிதலென்பதைப்பற்றி பன்முறை நம் பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். ஆயினும் அய்யங்காரவர்களுக்காக மீண்டும் திருப்புகின்றேன். பழையன கழிதலும் புதியனபுகுதலும் என்றுதான் பழமொழியே தவிர பழையன கழித்தலும் புதியனபுகுத்தலும்என்றல்லவென்பதை அய்யங்காரவர்கள்கவனிக்க வேண்டும். பலர் நகைப்பு என்கிறார். பலர் என்பவர் யார்? அன்னியமதத்தினரா? அவர்கள் நகைத்தால் அவர்கள் மதக்கோட்பாட்டைப்பார்த்து நாமும் நகைக்கின்றோம். அதில் பாதகமில்லை. நம்மவர்களோ மதக்கோட்பாட்டைப்பற்றி நகைக்க இடமில்லை. அய்யங்காரவர்கள் போன்றவர்களன்றோ மதத்தின் ஸ்வரூபம் தெரியாத அவைதிகர்களென்போம். ஆகவே நகைப்பு நம்மை யாதும் செய்யாது. இதனால் எங்கள்தொண்டு பலனுள்ளதே. இனி வைதிகர்கள் தங்கள் பெண்களின் நலத்தைக்கோர மறுக்

ராஹ்ணத்தில் ஹஸ்தமிருப்பதால் உரியகாலமாகும் என்பது என் சிற்றறிவின் எண்ணம் மற்றவைகளுக்குப்பண்டிதர்களே சரணம்.

---

குறிப்பு:— திருநெல்வேலி சைவபஞ்சாங்கத்தைத் தவிர வேறொன்றிலும் 22௳ உபாகர்மா போட்டதாகத்தெரியவுமில்லை.

---

## இரண்டு ஸந்தேஹங்களுக்குப் பதில்.

(1) தர்சத்தில் பிரத்யாப்திகம் வந்தால் எப்படிச்செய்வது? இதற்கு சிராத்தகாண்டம் பூர்வபாகத்தில் கூறியவாறு பிரத்யாப்திகத்திற்குப் பிறகு தர்சசிராத்தம் செய்துவருகிறதே சாஸ்திர சிஷ்ட ஸம்மதமாகுமென்று தெரிகிறது. ஷை உத்தரபாகத்தில்

दर्शे प्रत्याब्दिके सति विशेष उक्तः स्मृत्यन्तरे ।

என்றவிடத்தில் பிரகரணம் தர்சசிராத்தவிஷயமாயிருப்பதால் "அமாதினத்தில் மாதா, பிதா, மற்றவர்களுக்கோ பிரத்தியாப்திகம் வந்தால் தனியான பாகத்தால் முதலில் பிரத்தியாப்திகம் செய்து, பிறகு தர்சசிராத்தம், பிராம்மணவிஸர்ஜனம்வரையில் செய்து, பிண்டதானத்துக்குமுன் அமாதர்ப்பணத்தைச் செய்து தர்சசிராத்த பிண்டபிரதானம் செய்யவேண்டும்."

आब्दिके समनुप्राप्ते என்கிறவசனத்தினுல் तर्पणं नहि என்பது दर्शे तिलोदकं पूर्वं என்பதைத் தடுக்கிறது. पिण्डात्पूर्वं तु तर्पणं என்பது தர்சசிராத்த பிண்டதானத்துக்குமுந்தியே தவிர பிரத்தியாப்திக பிண்டதானத்திற்கு முந்தியல்ல. தனியான தர்சசிராத்தத்திற்கும் பிரத்தியாப்திகத்துடன் சேர்ந்த தர்சசிராத்தத்திற்கும் வித்தியாஸம் யாதெனில் அன்று தர்சதர்ப்பணம் வழக்கம்போல் தர்சசிராத்தத்துக்குமுந்தி செய்யாமல், அதன்பிண்டதானத்திற்கு முந்தி செய்வதே மாறுதல். ஆகையால் பிரத்தியாப்திகத்தின் மத்தியில் செய்வது சிஷ்டஸம்மதமாகாதுபோலும். இவ்விதம் மேற்கண்ட வசனத்திற்கு தாத்பர்யம் என்பதை நான் வயோவிருத்தர்களான சிஷ்டர்களால் கேள்விப்பட்டிருப்பதுமன்னியில், ஆபஸ்தம்ப பூர்வாபரஸூத்திரங்களை எல்லாவித உரைகளுடன் பரிசிலனை செய்தும் தன் ஜீவியகாலத்தையே இதற்காகச்செலவழித்தும் வேதாந்தமீமாம்ஸாசாஸ்திரங்களை நன்குணர்ந்தும் லோகோபகாரார்த்தமாக ஆபஸ்தம்ப பூர்வாபர பிரயோகங்களை பிரசுரித்து வெளியிட்டிருக்கிற நல்லூர் பிர்மஸ்ரீ கல்யாணஸுந்தரசாஸ்திரிகளின் அபாப்பிரயோகத்திலும் கூறியிருக்கிறது.

லைக்கும் தாயபாகம் கொடுக்க இந்தசட்டம் யாரைக்கட்டுப்படுத்தும். கர்ப்பத்துக்கு ஏதுவாய் இருந்தவன் இல்லையென்று ருஜு கொடுத்துவிட்டால் அவளின் கதியாது. இதனைவிரிக்கின் அலௌகிகத்தில் முடியுமானதால் இதை நிறுத்திக்கொண்டு எங்கள் வழியைக்காட்டுகிறோம்.

வீடு முழுமையும் முகட்டுப் பூச்சி, கொசு முதலியனவைகளின் உபத்திரவம் நேர்ந்துவிட்டால் மெள்ள மெள்ள படுக்கை முதலியவைகளை வெய்யிலில் காயவைத்தல் முதலிய வழிகளால் போக்கடிக்காமல் நிமிஷத்தில் போக்கிவிடுகிறேன் என்று ஒரு புத்திமான் வீட்டின் நாற்புறமும் தீ மூட்டிவிட்டதுபோல் சாரதாபில் வாதகூபிணைபிசாசை ஓட்டவாவேண்டாம். அவ்வாதகூபிணைப் பிசாசு பிடித்தவர்களை நாம் நமதுகோஷ்டியில் சேர்ப்பதில்லை. பெண்ணைப் பெற்றவன் சக்திக்கேற்றவாறு கன்னிகாதானம் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொண்டு ஏதாவது கேட்டதாய் வெளியானால் அவன் நமது கோஷ்டியில் சேர யோக்யதை அற்றவன். வீணாய் ஆடம்பரமாய் செலவு செய்ய வேண்டாம். வைதிக தர்மத்திற்கு இயன்ற செலவை மட்டிலும் செய்யவேண்டும். முதல் நாள் பகலில் பெண்ணகத்தில் விவாஹம் செய்துகொண்டு அன்று சாயந்திரம் முதல் **प्रविश्यहोम:** என்று மாப்பிள்ளை ஜாகையில் வந்து சேஷ ஹோமம் முடிய புருஷன் செய்துகொள்ளவேண்டும் என்று இம்மாதிரி சட்டங்களை நம் லோகாசார்யர்களின் முன்னிலையில் பிரதிக்ஞை செய்து சட்டம் செய்துகொண்டால் நம் சாஸ்திரம் தழைத்தோங்குவதுடன் நம் உலகம் மேன்மைக்கு வருவதுடன் நம்மைக் கண்டு பரதேசத்தவனும் சந்தோஷம் கொண்டு கொண்டாடும்படி நேரவேண்டுமென்பதுதான் வைதிகர்களின் கொள்கை. இதற்காகவே தான் குழந்தைத்தனமாய் நம் மதத்தைப்பாழாக்கயத்தனிக்கும் சீர்திருத்தக்காரர்களை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைஐயங்காரவர்கள் கோஷ்டியினர் அறியட்டும். இனி கடைசிவரையில் அவர்கள்முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே போவார்களானால் சீர்திருத்தக்காரர்கள் பழிவாங்கும் எண்ணத்தோடு வேலை செய்ய நேரிடுமென்பதை அவர்கள் அறியவேண்டுமென்று அய்யங்காரவர்கள் எங்களைப்பயமுறுத்தி புத்தியும் சொல்லிவிட்டார்கள். நாங்களும் கடைசியாய் ஐயங்காரவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு நிறுத்தி விடுகிறோம்.

அய்யங்காரவர்களே! கடைசியாய் பயமுறுத்துகிறீர்களே, ஓர் ஸன்னியாசி ஒரு கிராமத்திற்கு வந்தார். அவரை அழைத்து பிக்ஷை செய்துவைப்பார் ஒருவருமில்லை. பிறகு இரண்டொரு நாள் ஆனதும் ஸன்னியாசி பசிதாங்காமல் தெருக்கோடியில் நின்றுகொண்டு சத்தமிட்டு ஓ ஜனங்களே நான் இங்குவந்து 2-நாளாகிறது. எனக்கு பிக்ஷையேயில்லை. போனதுபோகட்டும். இன்னும் எனக்கு பிக்ஷை செய்து வைக்காமலிருக்கும் பக்ஷத்தில், இருக்கட்டும் அந்தக் கிராமத்தில் செய்ததுபோல் செய்துவிடுகிறேனென்று சொல்லிவிட்டு நதிக்கரை மண்டபத்திற்குவந்துவிட்டார். இதைக்கேட்ட ஜனங்கள் ஐயோ அந்தக்கிராமத்தில் பிராமணன் என்னசெய்துவிட்டாரோ தெரியவில்லையே. கிராமத்திற்கே அனர்த்தம் வந்துவிடுமோ என்று பயந்துகொண்டு எல்லோரும் வந்து காலில் விழுந்து ஸ்வாமி என் வீட்டிற்கு பிக்ஷைக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். என் வீட்டையும் என் குலத்தையும் பரிசுத்தம் செய்யவேண்டுமென்று யாவரும் பிரார்த்தித்தனர். ஸன்னியாசி சந்தோஷங்கொண்டு ஒரு வீட்டிற்குப்போய் பிக்ஷை செய்துகளித்தனர். அதுபோல் பழிவாங்கி விடுவார்களேன்கிறீர்களே, அம்மட்டோடு பயமாய் இருக்கிறது. ஸன்னியாஸிக்கு பிக்ஷைசெய்ததுபோல் அம்மட்டோடுநின்றுவிடவில்லை. அக்கதை மேல் பாகமும் எங்களுக்குத் தெரியுமாதலால் அதை வைத்துக்கொண்டு இப்போதே உங்களைக் கேட்டுவிடுகிறோம். நீங்கள் எவ்விதம் பழிவாங்குவீர்கள் எங்களைப் பலவாறுதுன்பத்திற்காளாக்குவீர்களா? அது ஆகாது. நாங்கள் ஸேது கன்யாகுமாரி முதல் இமயமலை உச்சிவரை இருக்கிறோம். உங்களவர்களின் வாஸம் இமயமலைச்சாரலோடு சரி. மற்றவிதத்தில் உபத்திரவப்படுத்துவதற்கும் சீர்திருத்தக்காரர்களாலாகாது. இவர்கள் எங்களைப் பழிவாங்க இவர்கள் நினைக்கும் சுயராஜ்யம் வந்தபிறகாகவேண்டும். எங்களை உதறித் தள்ளிவிட்டு அவர்கள் சுயராஜ்யமடையவும் முடியாதென்பதை அய்யங்காரவர்கள் நன்கு தெரிந்துகொள்ளட்டும். இனி கடைசியாய் இதைச் சொல்லி இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

இச்சட்டம் கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதென்பதையும் இப்போது தெரிந்துகொண்டோம். ஆயினும் இச்சட்டம் அமுலுக்குவரச் சற்று காலதாமம் ஏற்படவா

மென்று கூறிகிறபடியால் அதற்குள் இது எவ்விதமாகுமென்பதை நமது அய்யங்காரவர்களும் அவர்களது கோஷ்டியாரும் அமர்ந்து பார்த்திருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

# சாரதாமசோதா சட்டமாகிவிட்டது.

## ஆஸ்திகர்கட்கோர் விக்ஞாபநம்.

ஆரியர்களே! நாம் காலவளவின்றி அநுதிபரம்பரையாய் நடத்திவரும் நம் முக்கியமான விவாஹவிஷயத்தில் நம் மதத்திற்கும் நமக்கும் மிக விரோதமானஇச்சட்டத்தை சட்டமாக்கிவிட்டார்களென்று சென்ற செவ்வாய்க்கிழமைபேபரில் பார்த்தோம். இச்சட்டம் தோன்றியது முதல் இதை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென நாம் படுபாடுபட்டோம். ஏராளமாய் பணச்செலவு செய்தோம். நம்மதத்தையே காப்பதற்கு அவதரித்த காஞ்சிபீடாதிபதிகளும் மற்றும் பல மடாதிபதிகளும் ஏராளமாய் பல விதத்திலும் பாடுபட்டனர். இவ்வளவும் வீணாய் இப்போது ராஜாங்கத்தார் சட்டமாக்கிவிட்டார்கள். இனி நாம்செய்ய வேண்டிய வேலையைப் பற்றி முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். ஆதியில் சட்டமாக்கிவிடுவார்களோவென்று நடுங்கினோம், நடுவில் எதோ திருப்தி அடைந்தோம், கடைசியில் அமுலுக்குவரத் தயாராகிவிட்டது. இனி நமக்குத் துக்கமில்லை. இப்போது யோசிக்கும் அளவில் இது ஒரு நல்காலகுறி என்றே கொள்ளலாம். தகப்பன் அளவுக்குமீறி சம்பாதித்து பூமி, கிருஹம், ரொக்கம், வைத்துவிட்டு இறந்தபிறகு துக்கமே அறியாத அவனதுபுத்திரன் யாது செய்வான். ஒருவித விசாரமின்றி பணம் சம்பாதித்தவர் எவ்வாறு கஷ்டப்பட்டார் என்று யோசித்துப் பார்ப்பானு, மாட்டான். துர்மந்திரிகளின் பழக்கத்தை அடைந்து மனம் தோன்றியபடி செலவழித்து கடைசியில் உண்ண ஒருவாய்சோரின்றிதவிப்பான். இவ்விதம் சேரும் குடித்தனத்தை நாம் கண்கூடாய் சிலவிடங்களில் பார்த்திக்கிறோம். ஆனால்இன்னொரு பாகஸ்தன்சுகமாய் வீற்றிருப்பான். அதுபோல் நம் முன்னோர்களின் அழியாப்பொருளையடைந்தோம். அதைக் காப்பாற்றாமல் இருவகுப்பாய் பிரிந்து வைதிகர்

களென்றும், சீர்திருத்தக்காரர்களென்றும், ஆனோம். இப்போது நம் பாகஸ்தரான சீர்திருத்தக்காரர்கள் நம் ஐசுவர்யத்திற்கு பங்கம் செய்வித்து அகமகிழ்வதுடன், நம்மையும்பரிஹஸிக்கின்றனர். இனி இம்மகிழ்வு யாருக்கு எத்தமட்டும் என்பதை இருவரும் கவனிக்க வேண்டும். இது சட்டமாவதற்கு முன்வாரத்தில்ஒருவாறு சட்டமாகாதோவென்று கூடத்தோன்றிற்று அதாவது ஸெப்டம்பர் 4, 5-தேதிகளில் வைஸ்ராய் சபையில் நடந்தவிவாதத்தால் அவ்விதம் தோன்றிற்று. பிறகு 10-ம் தேதியிலும் 19-தேதியிலும் அவ்விதம் நினைக்கவே நேர்ந்ததாயினும் என் மனதில் மட்டிலும் இதைக்கவர்ண்மெண்டார் சட்டம் செய்தே தீரவேண்டும். அப்படிச்செய்தால்தான் நமக்கு அனுகூலமென்று தோன்றிற்று. அவ்விதமே நானும் திருக்கோவிலூரில் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளின் ஸன்னிதியில் பெரும் கூட்டத்தில் 22-9-29 ல் சட்டமாக்குவது அனுகூலமென்றே உபன்யஸித்தேன். அதை யாவரும் எற்றுக்கொண்டனர். அதன் பிரகாரத்தையே இங்கு கூறுகின்றேன்.

இதைப்பற்றி ஒருவாறு முன்னமேயேதெரிவித்திருந்தாலும் இங்கு வெளிப்படையாய்க் கூறுகின்றேன். ஏதோ இதில் வைதிகர்கள் தோற்றனரென்று களிகூறுகின்றனர். வைதிகர்கள்யார். சீர்திருத்தக்காரரைக் காட்டிலும் அன்யமதஸ்தரா. அன்யமதஸ்தர்களெல்லாம் இவர்களுக்குத் தோழரானால் நாம்மட்டிலும்விரோதிகள்தானே. அவ்விதமே நினைத்தமுடன் இப்போதும் சொல்லியும் விட்டார்கள். இனி நமக்கு ஒளிமறைவு வேண்டாம். இச்சட்டம் பாஸ் ஆகவேண்டுமென்று நான் நினைத்த காரணம் இது.—

சுமார் 30-வருடகாலமாய் நாம் நம் மதத்தின் ஸ்வரூபமின்னதென்று அறியாமலிருக்கத் தலைப்பட்டோம். அக்காலத்தில்முன்வரை எந்தக் கிராமத்தில் போனாலும் வேதகோஷம் நிறைந்திருந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஸ்தாபித்த வேதசாஸ்திர பாடசாலைகளிலும் அளவு கணக்கு வைக்கப்பட்ட பிள்ளைகள் அத்தியயனம் செய்வதும் சாஸ்திரம் கற்பதும் யோக்கியதைப் பெற்று வெளியேறுவதுமாய் இருந்தார்கள். இக்காலத்திலோ அவ்விதம் பாடசாலைக்கு பிள்ளைக்கிடைப்பதில்லை. கிடைத்தவர்கள் கொஞ்சம் நாள் இருந்துவிட்டு இதனால் பயனில்லையென்று காபிகிளப்புக்கு வேலைக்குச்சென்று விடுகின்றனர். ஆகவே

அப்பாடசாலைகள் அடைபட்டு விட்டன. இனி ஆங்கிலம்படிக்க பாடசாலைகள் கணக்கின்றி ஏற்படுகின்றன. கிராமத்திற்கு ஒரு ஹைஸ்கூல் என்றெல்லாம் ஏற்படுகிறது. இதில் படிக்கும் பிள்ளைகளோ மனிதர்கள் யாவரும் ஒன்றென்றே படிக்கிறார்கள். இவர்களுக்கு போதிக்கப்படும் படிப்பும், நம் மதத்திற்கும், குலத்திற்குமே பரம விரோதமான் படிப்புக்கள்தான். இவர்களுக்கு முதலில் படிப்பில் தேருவிடினும் மதவிரோதம் செய்வதில் பரம தீரர்களாய் ஆகிறார்கள். ஏழைகள் விதவைகள் முதல் எப்பாடு பட்டாவது பையனைப் படிக்க வைக்கவேண்டும். பிழைப்பு நடக்க வேண்டுமென்று மட்டிலும் எண்ணம் கொண்டு விட்டார்களே அன்றி ஈசன் என்றும் வேதமென்றம் அறியவேயில்லை. இத் தகையோர் உத்தியோக தசையை அடைந்துவிட்டபின் இவர்கள் வைதிகஸந்ததியோர்களாயினும் அவர்களிடம் பேசவாரம்பித்தால் அவர்கள் படித்த படிப்பின்படி வேதத்திற்கு வயதைக் கற்பிப்பதையும், வர்ணாசிரமம் ஒருகாலம் ஏற்பட்டதென்பதையும் கூறுகின்றனர். இவ்விதமெல்லாம் நாம் பலவிதத்திலும் மதப்படிப்பை அலக்ஷ்யம் செய்து வந்தோம். (இன்னும்வரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி

---

# திதிநிர்ணய காரிகை.

(ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் இயற்றியது.)

(௫௪௪-வது பக்கத்தொடர்ச்சி)

அதாவது—

“ अत्र केचिन्मुधाभिमानिनो वदन्ति— दृक्संवादार्थी बीजोपनीतिः आगमैकशरणानामनादरणीयेति ”

“ இங்கு சிலர் வீணான அபிமானங்கொண்டு— ‘ஆகமத்தையே சரணமென்று நம்பியிருப்பவர்களுக்கு நமது பார்வைக்கு ஒத்து வருவதற்காகச் செய்யப்படும்பீஜஸம்ஸ்காரம் ஆதரிக்கத்தக்கதல்ல’ என்று சொல்லுகிறார்கள் ” இந்த சங்கைக்கு ஸமாதானம்.

“ तच्च, “ तत्तद्गतिवशान्नित्यं यथा दृक्तुल्यतां ग्रहाः। प्रयान्ति तत्प्रवक्ष्यामि स्फुटीकरणमादरात् ” इत्यादि सूर्योक्तिविरोधा दागमैक शरणानामप्यादरणीयमेव ”

அப்படிச் சொல்வது கூடாது. "ஒரு தினத்தில் சீக்கிரமாயும் மறுதினத்தில் அதிசீக்கிரமாயுமென்றிவ்வாறு தினந்தோறுமுள்ள கதிபேதத்தை அனுசரித்து ஸூர்யாதிகிரஹங்கள் எந்தப்பிரகாரமானால் நமது கண்பார்வைக்கு ஸமானமாய் வருகின்றனவோ அந்த ஸ்புடக்கிரியையை ஆதரவுடன் கூறுகின்றேன் என்ற ஸூர்யபகவானது வசனத்திற்கு விரோதப்படுவதனால் ஆகமத்தையே சரணமென்று நம்பினவர்களுக்கும் அந்த பீஜஸம்ஸ்காரம் ஆதரிக்க வேண்டியதுதான்" என்று கூறப்பட்டது.

"अपरेतु– अस्य काचित्कविनियोगात् प्रयोजनमान्द्यं मन्यन्ते"

"வேறுசிலர்- இந்த பீஜஸம்ஸ்காரம் சிலவிடத்தில் மாத்திரம் விநியோகப்படுவதால் இதற்கு அதிகப் பிரயோஜனமில்லையென்று நினைக்கிறார்கள்" என்று சங்கை.

"तदपि तिथ्यादिकरणाम्नान प्रकरणविरोधादुपेक्षणीयम् ।
नहि केन चिदागमेन मध्याध्याये तिथ्याद्यानयनमाम्नातं"

"அப்படிக் கூறுவதும் திதி முதலியவைகளைக் கண்டு பிடிக்கும் வழியைக் கூறுகின்ற பிரகரணத்திற்கு விரோதப்படுவதால் உபேக்ஷிக்க வேண்டியதே. அதாவது மத்தியகதியைக் கூறும் மத்தியாதிகாரத்திலேயே மத்தியகதியைக்கொண்டு திதி முதலியவைகளை எடுத்திருக்கவேண்டும். அப்படி ஒரு ஆகமத்திலாவது மத்தியாதிகாரத்திலேயே திதி முதலியவைகளை எடுக்கும்படிச் சொல்லப்படவில்லை" என்று பரிஹாரம்.

"अन्ये तु स्पष्टीकरण मबीजपर्यन्तं मन्यन्ते"

"மற்றும் சிலர் இந்த ஸ்புடக்கிரியை பீஜஸம்ஸ்காரம் வரைக்கும் செய்யவேண்டியதில்லை. ஆனால் அதற்குக் கீழ்ப்பட்டுள்ளது வரை செய்தால் போதுமென்று நினைக்கிறார்கள்" என்று சங்கை.

"तदपि प्रामाणिकैर्मध्यग्रह एव बीजोपनयनस्यानुष्ठानात्
तथैव निबन्धनाच्च प्रतिक्षेप्यम् ।"

"அதுவும்— பிராமாணிகர்கள் மத்தியக்கிரஹத்திலேயே பீஜஸம்ஸ்காரத்தைச் செய்து வருவதாலும், அப்படியே நிபந்தனங்களில் எழுதப்பட்டிருப்பதாலும் தள்ளத் தக்கது— என்று பரிஹாரம்,

(இன்னும்வரும்) பத்திராதிபர்.